# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 171 ஆங்கீரச வைகாசி 03 (16. 05. 1992) சனி


★ அகதிகள் மீளக் குடியேற வசதியாக

## வங்காலை ராணுவ முகாமை அகற்றுமாறு கோரிக்கை

வங்காலையில் உள்ள இராணுவ முகாமை அகற்றினால்தான் அப்பகுதியில் தாம் மீண்டும் வந்து குடியேற முடியும் என வங்காலையிலிருந்து அகதிகளாக வெளியேறிய தமிழ் மக்கள் வற்புறுத்தியுள்ளனர். இப்பகுதி மக்களால் தயாரிக்கப்பட்ட மகஜர் மன்னார் அரச அதிபர் மூலமாக ஜனாதிபதி பிரேமதாசவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனிடையே வங்காலை மக்களை மீள குடியமர்த்துவது தொடர்பாக மன்னார் ஆயர் வண. செனந்திரநாயகம் முகாம் பிரிகேடியருடன் பேச்சு நடத்தியுள்ளார். அப்போது வங்காலை முகாம்

—04 பக்கம் பார்க்க

# தமிழரின் இன எழுச்சி மீதான அச்சமே

# புலிகள்மீது இந்தியா விதித்த தடை

## "இந்தியா தொடர்ந்து இழைத்துவரும் துரோகமே" என புலிகள் அறிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக டில்லி ஆட்சிபீடம் கூறுகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகள் இந்தியாவின் விரோத சக்தியாகச் செயற்படவில்லை, அத்துடன் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கவும் எண்ணவில்லை, இந்தியா அஞ்சுவது புலிகளுக்கு அல்ல, தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்குமே இந்தியா பயப்படுகிறது. தமிழ்த் தேசாபிமான எழுச்சியின் புரட்சி வடிவமாகவே இந்திய அரசு புலிகளையும் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நோக்குகிறது. இதனால்தான் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து தலைவர் பிரபாகரன் மீது மாசுகற்பிக்க இந்தியா முயற்சிக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அதிகார பூர்வ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

### தூர நோக்கமற்ற நடவடிக்கை

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சட்ட விரோத அமைப்பாக பிரகடனப்படுத்தி இந்திய அரசு தடை விதித்துள்ளது. தனது குறுகிய தேசிய நலனையும் உடனடி அரசியல் லாபத்தையும் கருத்தில் கொண்டு இந்தியா எடுத்துள்ள இந்த நடவடிக்கை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. தமிழீழ மக்களின் நியாயமான தேசியப் போராட்டத்திற்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்துவரும் துரோக நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகவே நாம் இதனைக் கருதுகிறோம். இந்த நடவடிக்கை மூலம் தென்னாசியாவிலுள்ள தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்திவிட்டது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தூரநோக்கற்ற ராஜதந்திர விவேகமற்ற இந்த அவசர நடவடிக்கை வருங்கால எதிர்காலத்தில் இந்திய பூகோள-அரசியல் நலன்களுக்குத்தான் பாதகமாக அமையக்கூடும்."

### எது சட்டவிரோதம்?

"தமிழ்நாட்டு இளைஞர் ஞர்களுக்கு இராணுவப்பயிற்சி

## மன்னாரில் படையினர் இளம்பெண்மீது மானபங்கம்

மன்னார் - தாழ்வுபாடு வீதியில் உள்ள கீரி என்ற இடத்தில் கடந்த 8 ஆம் திகதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர், வீட்டினுள் புகுந்து இளம் பெண்ணை மானபங்கப்படுத்தியதாக மன்னாரில் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

செல்வி மங்களம் (22) என்ற இளம் பெண்ணே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவரது தந்தை படையினரால் மரத்துடன் கட்டி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட படையினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். 07

## முருங்கன் மக்கள் திரும்புகின்றனர்

இராணுவ நடவடிக்கையின் போது உயிலங்குளம், வஞ்சியன்குளம், புதுக்குளம், முருங்கன், [illegible] ஆகிய இடங்களிலிருந்து வெளியேறிய மக்கள் தற்போது தத்தமது இடங்களுக்குத் திரும்புகின்றனர்.

ஆனால் மக்களின் பொருள்களை படையினர் சூறையாடிவிட்டதனால் அவர்கள் பெரும் அவலநிலைக்குள்ளாகியிருக்கின்றனர்.

வீடுகள் எரிக்கப்பட்டுள்ளதால் குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கின்றன.

## 15 ஆயிரம் தமிழ் அகதிகளே தாயகம் திரும்ப விருப்பம்

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் தற்போது 15 ஆயிரம் பேரே தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்

முன்னர் தாயகம் திரும்பும் விருப்பத்தை தெரிவிக்கும் படிவங்கள் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டதினால் பலர் அதில் என்ன உள்ளது என அறியாமலேயே தமது சம்மதத்தை வெளியிட்டிருந்தனர். இதை பல சர்வதேச அமைப்புகள் கண்டித்தன

இதைத்தொடர்ந்து தமிழில் படிவங்கள் வழங்கப்பட்ட போது 15 ஆயிரம் பேரே தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

★ ஸ்ரீலங்காவிடம் இந்தியா வற்புறுத்து

## இனப்பிரச்சினை தீர்வுக்கு புலிகளை பயன்படுத்த முடியாது

இந்தியா விடுதலைப்புலிகளை தடைசெய்திருப்பதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினை தீர்விற்கு புலிகளை ஒரு கருவியாக பயன்படுத்த முடியாது என்பதை இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசிடம் தெளிவாக அறிவித்துள்ளதாக இந்திய வானொலி நேற்றுக் குறிப்பிட்டது.

பொதுநலவாய நாடுகள் ஒப்பந்தத்தின் கீழ் உறுப்பு நாடுகளான ஸ்ரீலங்காவும் இந்தியாவும் நாடுகடத்தல்களை நடைமுறைப்படுத்த முடியும் என நேற்று டில்லியில் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இதன்மூலம் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நாடு கடத்துமாறு கோருவது என்ற தனது உறுதியை டில்லி மீண்டும் வலியுறுத்தியுள்ளது என்றார்.

## முருங்கன் பகுதி வீடுகளில் இராணுவத்தினர் கொள்ளை

அண்மையில் முருங்கன் பகு ... ன் கிணற்றில் வீசப்ப டி

## தடை ஆச்சரியம் தரவில்லை என்கிறார் பிரட்மன்

புலிகள் மீதான தடை குறித்து இந்தியாவின் அறிவிப்பு ஆச்சரியம் தரவில்லை

... கோசன் தெரிவித்தார்.

முன்னதாக புலிகள் மீதான தடையுத்தரவு இந்தியாவைப்

## எது சட்டவிரோதம்?

"தமிழ்நாட்டு இளைஞர் சிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதப்பயிற்சி அளித்ததாகவும், தமிழ்நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டிவிட்டதாகவும் இந்தியா எமது இயக்கம் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறது. இந்த குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. இந்திய அரசுதான் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சியும் அளித்து, ஆயுதமும் வழங்கி, ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டது. தமிழ் இளைஞர்களை பகடைக்காய்களாக பாவித்து தனது பூகோள நலன்களைப் பூர்த்திசெய்ய முனைந்தது. அப்பொழுது இந்த நடவடிக்கைகளை 'சட்டவிரோதமானது' என இந்திய அரசு கருதவில்லை.

## இந்தியாவே தலையிட்டது

தமிழர் தேசியப் பிரச்சினையில், அதாவது, ஒரு அந்நிய நாட்டுப் பிரச்சினையில் இந்திய அரசுதான் தலையிட்டது. அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்திற்கு ஒரு ஆக்கிரமிப்புப் படையை அனுப்பிவைத்ததும் இந்திய அரசுதான். விடுதலைப் புலி

— 04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினர் கொள்ளை

அண்மையில் முருங்கன் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது உயிலங்குளம், முருங்கன், புதுக்கமம், இசந்தபாம், 11ஆம் கட்டை ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன

ரேடியோ, தையல் யந்திரம், விவசாய உபகரணங்கள், சேர்த்துவைத்த நெல் மூடைகள் என்பனவற்றை தமது வாகனங்களில் இராணுவத்தினர் ஏற்றிச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடைகள், கோழிகள் என்பனவும் பிடித்துச் செல்லப்பட்டுள்ளன. கொண்டு செல்ல முடியாத பொருள்கள் கிணற்றில் வீசப்பட்டிருந்ததாகவும் சுமார் 25 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (07)

## "தடா" சட்ட நீடிப்புக்கு டெல்லியில் எதிர்ப்பு

இம்மாதம் இருபத்து மூன்றாம் திகதியுடன் காலாவதியாகும் இந்தியாவின் பயங்கரவாத மற்றும் அழிவு நடவடிக்கைகள் "தடா" சட்டத்தை காலநீடிப்பு செய்ய வேண்டாமெனக் கோரி கல்விமான்கள் சட்டத்தரணிகள் சமூக சேவகர்கள் மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என பலர் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் நேற்று டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

ஆசாம், பஞ்சாப், ஜம்மு-கஷ்மீர் தமிழநாடு ஆகிய மாநிலங்களில் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

புலிகள் மீதான தடை குறித்த இந்தியாவின் அறிவிப்பு ஆச்சரியம் தரவில்லை இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

. முன்னதாக புலிகள் மீதான தடையுத்தரவு இந்தியாவைப் பொறுத்தவிடயம் என பிரட்மன் கூறியிருந்தமை தெரிந்ததே.

## சுற்றிவளைப்பு

செட்டிகுளம் படையினர் நேற்று முன்தினம் முகாமிலிருந்து 500 யார் தொலைவிலுள்ள கிராமம் ஒன்றை சுற்றிவளைத்து 6 பொதுமக்களை கைது செய்தனர்

## வெளியேறுவோர் கைது

அம்பாறையிலிருந்து வெளியேறும் தமிழ்மக்கள் வழியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டுசெல்லப்படுகின்றனர்

★ ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் அறிவிப்பு

# பிரபாகரன் ஒப்படைப்பு விடயம் நீதிமன்றத்தைப் பொறுத்தது

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதா இல்லையா என்பது குறித்த நீதிமன்றமே முடிவெடுக்க வேண்டுமென ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனை ஒப்படைக்க இலங்கை பின்நிற்கிறது என இந்தியாவில் தெரிவிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரட்மன் இவ்வாறு தெரிவித்தார்.

முதலில் இந்திய நீதிமன்றம் தனது விசாரணைக்கு திரு பிரபாகரன் தேவை என்பதை அறிவித்த பின்னர் இலங்கை நீதிமன்றம் அதனைப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் இதுவே வழமையான சட்ட ரீதியிலான செயலாகும்.

இதன்படி பிரபாகரனை ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நீதிபரிபாலனத்துடன் சம்பந்தப்பட்டது—அரச அதிகாரியிடம் சட்டரீதியினாலது அல்ல இவ் விடயத்தில் "பிடி" எதுவும் எவரிடமில்லை என திரு பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

## தீவுப்பகுதிப் போட்டிகளை யாழ்.நகரில் நடத்த முடிவு

தீவுப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கி இருப்பதினால் தீவுப்பகுதிகளில் வருடா வருடம் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு மட்டத்தில் நடத்தப்பட்டு வந்த விளையாட்டுப் போட்டிகளை இம் முறை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் செய்து வருகின்றனர்.

அதற்கு முன்னோடியாகக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் விசேடமாக தலைவர்கள் செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (16)

## உற்சவம்

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூன் மாதம் வழமைபோல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்படவில்லையாம்

யாழ். குடாநாட்டின் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்படவில்லையென இராணுவப் பேச்சாளர் லேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## சொற்பொழிவு

இசைப் பேரறிஞர் வே. சந்திரசேகரத்தின் "சைவ சித்தாந்தமும் திருமுறைகளும்" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவு கந்தர்மடம்-ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில், இம் மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3, 30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமசுந்தரவேல் சுவாமிகளின் ஆசியுடன் இடம்பெறவுள்ள இச் சொற்பொழிவினை, குருபீட பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மடு உற்சவம் வழமைபோல்

மடுமாதா தேவாலய திருநாட்கள் வழமைபோல நடைபெறுகின்றன

இங்குள்ள அகதிகள் பெருமளவு இத்திருநாட்களில் கலந்துகொள்கின்றனர் என தேவாலய பரிபாலகர் தெரிவித்தார்.

## பாக். பிரஜைகள் வவுனியாவில் கைவரிசை

வவுனியாவிலுள்ள பிரபல வியாபார நிறுவனமொன்றிலிருந்து 71 ஆயிரம் ரூபா பணம் பட்டப்பகலில் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த வியாபார நிறுவனத்திற்கு சிரம் வாங்க வந்த மூவரே இக் கைவரிசையைக் காட்டினராம்.

இதனையடுத்து அந்த மூவரும் வவுனியாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் உல்லாசப் பயணிகளாக இங்கு வந்த பாகிஸ்தானியர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உடுப்பிட்டி நூலகத்தில் இனந்தெரியாதவரின் சடலம்

உடுப்பிட்டியிலுள்ள கிராமசபை படிப்பகத்தில் இறந்து கிடந்த ஒருவரின் சடலம் பருத்தித்துறை காவல்துறையினரால் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

85 வயது மதிக்கத்தக்க ஐந்தரை அடி உயரமுடைய மேற்படி நபர் சாரமும் சேர்ட்டும் அணிந்து காணப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (09)

## தமிழ் மொழி அமுலாக்கல் பற்றிய விவரம் சேகரிப்பு

தமிழ்மொழி அமுலாக்கலை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச அலுவலகங்களில் தமிழ் மொழி அமுலாக்கலை துரிதப்படுத்தும் நோக்குடன் இது தொடர்பாக எதிர்நோக்கப்படும் தடைகள் பற்றித் தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மொழியில் பெறப்படும் கடிதங்களின் எண்ணிக்கை, அதற்கான பதில், மொழி பெயர்ப்பு போன்ற விவரங்கள் அமைச்சுக்கள் திணைக்களங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

## வலைபந்தாட்டத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வலைபந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் வலைபந்தாட்டப் போட்டிகளையும், வலைபந்தாட்ட முகாம்களையும் நடாத்துவதற்கு தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டுப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதல் நடவடிக்கையாக மாவட்டத்தில் கடமையாற்றும் தகுதிபெற்ற வலைபந்தாட்ட நடுவர்களின் விவரங்களையும், தற்போது போட்டிகளில் கடமையாற்றும் வலைபந்தாட்ட நடுவர்களின் பெயர் விபரங்களையும் தந்துதவுமாறு தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ் கல்விப் பணிப்பாளரையும், அரச அதிபரையும், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களையும் கேட்டுள்ளது. 15

## தபால் நிலையங்கள் மூலம் மாதாந்த விவசாய ஒய்வூதியம்

விவசாய ஒய்வூதியம் இம்மாதம் முதல் தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

இந்த விவசாய ஒய்வூதிய திட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதி கொழும்பில் ஒய்வூதியத்தை வழங்கி திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதேவேளை இத்திட்டத்தில் இணைந்து கொண்ட வவுனியாப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தமிழ் விவசாயி ஒருவர் திடீரென காலமானதையடுத்து விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் அவரது குடும்பத்தினருக்கு நேற்று 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

## பண்டத்தரிப்புக்கு 75 பந்துகள்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாட...


## கிளிநொச்சி மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(வரையறுக்கப் பட்டது)

பதிவு இலக்கம். பி.எ, 73 - 20. 8. 1980

# அறிவித்தல்

1990ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக எனது கணக்குப் புத்தகங்கள் யாவும் அழிக்கப்பட நேரிட்ட காரணத்தினால் கூட்டுறவு உதவி ஆணையாளர் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்தும் சம்மிடம் இருந்த தகவல்களிலிருந்தும் கிடைக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு 30-06-90இல் முடிவடையும் நிதியாண்டிற்குரிய நிதிநிலைக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

30. 06. 90 இல் நிதிக்கூற்று

| | | | |
|---|---|---|---|
| அங்கத்துவ சங்கங்களின் பங்கு | - 61840 00 | மக்கள் வங்கி பங்கு | - 100 00 |
| புனர்வாழ்வுக் கடன் | -1186956 35 | பயிர்ச்செய்கை கடன் | - 20765 00 |
| குறைந்த வருமான கடன் | - 92000. 00 | வீடமைப்புக்கடன் | -1806398 58 |
| வங்கிக் கடன் | - 22908. 00 | புனர்வாழ்வுக்கடன் | -1205816. 00 |
| அங்கத்துவ சங்கங்களின் சேமம் | - 600423. 41 | விசேட கடன் | - 261400. 00 |
| | | குறைந்த வருமானக் கடன் | - 92000.00 |
| | | கிராமிய வங்கி நிலையான வைப்பு | - 1000 00 |
| தேசிய வீட/ அபி/ அதி/ சபை கடன் | -2012924 66 | கட்டாய சேமம் | - 168612 00 |
| | | சம்மேளன பங்கு | - 55553, 24 |
| ஊழியர் பிணை | - 1000. 00 | தளபாடம் | - 5000 00 |
| | | விபரமற்ற சொத்து | - 861407 60 |



## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

1, சுகாதாரப் போதனாசிரியர்

2. தாதியர் போதனாசிரியர்,

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கல்வித் ...

| | | | |
|---|---|---|---|
| சமைகடன் | -2012924 66 | [illegible] சேமம் | - 168612 00 |
| | | சம்மேளன பங்கு | - 55553, 24 |
| ஊழியர் பிணை | - 1000. 00 | தலைபாடம் | - 5000 00 |
| | | விபரமற்ற சொத்து | - 861407 60 |
| | 3978052 42 | | 3978052, 42 |

இவற்றிற்கான தகவல்களும் அட்டவணைகளும் கூட்டுறவு உத்தியோகத்தர்களினால் சரிபார்க்கப்பட்ட பின் இவற்றினை பிரசுரப்படுத்துவதற்கான தீர்மானம் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கூற்றின் மேலதிக விபரங்களையும் சம்பந்தப்பட்ட அட்டவணைகளையும் எமது சமாசத்தில் பார்வையிடமுடியும். இதில் ஏதாவது வருமதிகள் செலவுகள் கணக்கிடப்படவில்லையென சம்பந்தப்பட்ட எவராவது கருதினால் உரிய ஆவணங்களுடன் மேற்படி பணிமனையில் எம்முடன் காரியாலய நேரத்தில் தொடர்பு கொண்டு திருத்தங்களை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் இதற்கான கால அவகாசம் 10 06 92 வரையில் ஆகும் அதன் பின்னர் இவ்விடயம் சம்பந்தமாக எதுவித பரிசீலனையையும் சமாசம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்பதை வெளிப்படுத்திக்கொள்கின்றோம்.

தங்கள் கூட்டுறவு சேவையிலுள்ள,
திருமதி சா கணேசநாதன்
மாவட்ட செயலாளர்.

05022

## 75 பந்துகள்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு 75 உதை பந்துகள், வலை பந்தாட்டப் பந்துகளை யாழ் கல்வித்திணைக்களம் விரைவில் வழங்கவுள்ளது. (18)

## மெய்வல்லுநர் போட்டிகள்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமையும் 21 ஆம் திகதி வியாழக்கிழமையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (18)

1. சுகாதாரப் போதனாசிரியர்
2. தாதியர் போதனாசிரியர்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கல்வித் தகைமை, அனுபவம், ஆற்றல், சேவை செய்யும் மனப்பான்மை உடையோரிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் 26-06-92க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். 28-06-92 காலை 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

78, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
14-05-1992

05030

### இந்தியாவே தலையிட்டது .......

களுடன் போர் தொடுத்து தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்ததும் இந்திய அரசு தான். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பத்தாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்ததும் இந்திய அரசுதான். ஆகவே,

ஒட்டுமொத்தத்தில் இந்திய அரசுதான், அதுவும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சி பீடம்தான் எமது உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. இவ்விதம் தமிழீழ மக்களுக்கு எதிராக பெரும் வரலாற்றுத் தவறுகளை இழைத்துவிட்டு இப்பொழுது நாம் இந்திய விவகாரத்தில் தலையிடுவதாக எமது இயக்கம் மீது இந்திய ஆட்சிபீடம் குற்றம் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டு விசமத்தனமானது.

## தமிழ்நாட்டிற்கான விலங்குகள்

அயல்நாட்டில் இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமான புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதன் மூலம் தமிழ் நாட்டில் எழுவாகிவரும் தேசிய உணர்வலைகளுக்கு அணைகட்டி விடலாமென டில்லி ஆளும் வர்க்கம் கருதுகிறது. எனவே புலிகள் மீதான இத்தடையானது தமிழ் நாட்டுத் தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருதவேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய பொறுப்பு தமிழக மக்களையே சாரும்"

## காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் வண்டுகள் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் உள்ள மா மூடைகளில் வண்டுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவ்வண்டுகளை கட்டுப்படுத்துவதற்கு கொழும்பில் இருந்து நான்கு சிங்களத் தொழிலாளர்கள் காங்கேசன்துறை களஞ்சியத்திற்கு வந்திருப்பதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

இந்தக் களஞ்சியத்தில் கூடுதலான மா மூடைகள் பல நாள்களாக இருப்பதால் வண்டுகளின் பெருக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

● இந்திய அமைச்சர் குற்றச்சாட்டு

## காஷ்மீர் அமைதியின்மைக்கு பாகிஸ்தான் காரணம்

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் அமைதியின்மை நிலவக் காரணம் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு அளிக்கும் நிதி மற்றும் ஆயுத உதவிதான் இவ்வாறு இந்திய வெளியுறவு இணையமைச்சர் எட்வெட் பெலேரோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தோனேஷியாவின் பாலித்தீவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாநாட்டில் கலந்துகொண்ட பாகிஸ்தான் அமைச்சர் காஷ்மீரில் இந்தியா மனித உரிமைகளை மீறி வருவதாக குற்றஞ்சாட்டினார்.

● யாழ் ஆஸ்பத்திரியில்

## 16 வெற்றிடங்களுக்கு 8எழுதுவினைஞர் நியமனம்

யாழ். பெரியாஸ்பத்திரி அலுவலகத்தில் 16 எழுதுவினைஞர்களுக்கு வெற்றிடங்கள் இருந்தும், போட்டிப் பரீட்சையில் தெரிவானவர்களில் எட்டுப்பேரே செயலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான பலர் தினமும் யாழ் செயலகத்திற்கு வந்து தமக்கு எப்போது நியமனம் கிடைக்கும் என விசாரித்துச் செல்வதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

யாழ் ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் வெற்றிடங்கள் குறித்து அண்மையில் கொழும்பு சென்ற தாதிகளுடன் வினவ சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது 07 06

## தமிழர் பாரம்பரிய சின்னங்கள் திருமலையில் அழிப்பு

திருகோணமலையில் உள்ள தமிழர்களின் பாரம்பரியச் சின்னங்கள் திட்டமிட்டு அரசினால் அழிக்கப்பட்டு வருவதாக திருமலை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரூபன் தெரிவித்துள்ளார்

பல தமிழ் பாரம்பரிய தமிழ் கிராமங்களில் தமிழ்ச்சின்னங்கள் அழிக்கப்படுவதாகவும் இங்கு பௌத்தவிஹாரைகள், சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 16-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ அரச அதிபர் தகவல்

# எமது கிராம அபிவிருத்திக்கு 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

கஷ்டமான சூழ்நிலையிலும் எமது கிராமங்களின் வளர்ச்சிக்கு நாம் பாடுபடவேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்தி திணைக்கள தையல், மனையியல் பொருட்காட்சியை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

மாவட்ட பிரதி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசிய அரச அதிபர்; பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் கிராம அபிவிருத்திக்கு 4 லட்சம் ரூபாவும், மாகாணசபையிடமிருந்து 3 லட்சம் ரூபாவும், தையல் பயிற்சிக்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கிராம அபிவிருத்தியில் ஆர்வம் காட்டுபவர்களையோரும் பு[illegible] அனுப்பி பயிற்சியளித்து அவர்கள் மூலம் எமது கிராமங்களை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தற்போதைய சூழ்நிலையிலும் இவ்வாறான பொருட்காட்சிகள் எம் மத்தியில் அவசியமானவை என்றார்

பல ஆயிரக்கணக்கானோர் இப் பொருட் காட்சியை கண்டுகளித்தனர். 06

## இருவாரங்கள் நிவாரணம்

தீவக பகுதியில் இருந்து அராலியில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு தற்போது இரண்டு வாரங்களுக்குரிய இலவச உலர் உணவு விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

## பொருள்கள் மீதான வரி இம்மாதம் முதல் அமுல்

வடக்கு கிழக்கு போர்ச் செலவு அதிகரிப்பினால் நிதி நிலைமையை சமாளிக்கும் முகமாக உள்ளூர் மற்றும் இறக்குமதி பொருள்கள் மீதான வரி மூன்று சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல அத்தியாவசியப் பொருள்கள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

01-05-92 முதல் இந்தவரி அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது

வடக்கு கிழக்கு யுத்தத்தை தொடர வரி விதிப்பு அதிகரிப்பது அவசியமாகிறது என நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது

வரி அதிகரிக்கப்படலாமென நேற்று செய்திகள் வெளியாகியிருந்தது நினைவிருக்கலாம்.

## வடபகுதி தபால் பகுதியில் 60 வெற்றிடங்கள் உள்ளன

வடபகுதி தபால் திணைக்களங்களில் 60வெற்றிடங்கள் உள்ளதாக பிரதி தபால் மா அதிபர் எல் எம் சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

எழுதுவினைஞர், ஊழியர்கள், தபால் உதவியோகத்தர் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வு பெற்ற தபால் அதிபர்கள் மூலம் சில இடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் 06

வங்காலை...

பிரிகேடியர் முகாமின் எதிர்காலம் குறித்து விரைவில் தெரியப்படுத்துவதாக உறுதியளித்தார்.

வங்காலையிலிருந்து வெளியேறிய பெருமளவு மக்கள் மன்னார்தீவின் சனிவிலேஜ் அகதிமுகாம் மற்றும் மடுமுகாம் ஆகியவற்றில் தங்கியுள்ளனர், இதைத்தவிர இந்தியாவிற்கு சென்ற வங்காலை மக்கள் தற்போது திரும்பி வந்துள்ளனர். இவர்களை அகதிமுகாம்களில் தங்க வைப்பதில் அதிகாரிகள் இடநெருக்கடியை எதிர்நோக்கின்றனர்,

இதனால் வங்காலை மக்களை தமது சொந்த இடங்களுக்கு திருப்புமாறு வற்புறுத்திய போதிலும் அவர்கள் வங்காலை இராணுவ முகாம் அகற்றப்பட்டாலே தாம் அங்கு சென்று குடியேற முடியும் என வற்புறுத்தி வருகின்றனர்

வங்காலை இராணுவ முகாம் சுமார் ¼ மைல் விஸ்தீரணமுள்ளது 1990 ஆம் ஆண்டிற்கு முன் வங்காலை 6ஆம் வட்டாரத்தில் மட்டுமே முகாம் இருந்தது. எனினும் இதன் பின்னர் வங்காலை மக்கள் முழுவதுமாக வெளியேறி வதைப்படுத்த முகாம் வங்காலை பகுதியெங்கும் விஸ்தரிக்கப்பட்டது. (07)

## ஆவண பாதுகாப்பு நிலையம் திறந்துவைக்கப்பட்டது

யாழ் செயலகத்தில் ஆவண பாதுகாப்பு நிலையம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மங்கல விளக்கேற்ற அவரது பாரியார் சம்பிரதாயபூர்வமாக இந்நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிலையம் அபிவிருத்தி தொடர்பான அரும்பெரும் வெளியீடுகளை முறைப்படி சேகரித்து அபிவிருத்தி கல்விக்குதவிடவேண்டும் என அரச அதிபர் இங்கு கூறினார். (47)

## 20ஆம் திகதிக்கு முன்பாக குடும்பஅட்டை பதியவும்

யாழ் மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் அனைவரையும் பதிவு செய்யும் குடும்ப பதிவு அட்டை வேலைகள் யாவும் இம் மாதம் 20ஆம் திகதியுடன் முடிவடையும்.

இதனால் பொதுமக்கள் யாவரும் தத்தம் பகுதி கிராம சேவகருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு உரிய விபரங்களைக் கொடுத்து தங்கள் குடும்பத்திற்குரிய பதிவட்டையை பூர்த்தி செய்யுமாறு புனர்வாழ்வுப்பகுதி அறிவித்துள்ளது

20 ஆம் திகதிக்கு பின்பு பதியப்படுகின்ற குடும்பப்பதிவு அட்டைக்கு புதிய தாமதக்கட்டணம் அறவிடப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது

அத்துடன் யாழ் மாவட்டத்தில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இல்லாமல் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து அகதிகளாக குடியிருக்கும் மக்களும் கல்வி தொழில் நோக்கங்களுக்காக யாழ்மாவட்டத்திற்கு தற்காலிகமாக வாழுகின்ற தனிநபர்களும் குடும்பங்களும் தாங்கள் வாழும் பகுதி கிராமசேவகருடன் அவர்களை தொடர்ந்து பதியுமாறு யாழ் செயலக குடும்பப் பதிவு அட்டை கணிப்பீட்டுப் பிரிவு வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டுள்ளது 47

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது தவறி விழுந்த ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் நீரில் பலியான சம்பவம் சங்கானையில் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது

காரைநகர் தோப்புக்காடு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து சங்கானையில் தஞ்சமடைந்திருந்த திரு செ. தவவடிவேலுவின் மகன் தவச்செல்வரூபன் (7 வயது) என்னும் சிறுவனே இவ்வாறு கிணற்றில் தவறி விழுந்து பலியானவராவார். (18)

தடா ...

படுகின்றன.

ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு இச்சட்டத்தை தவறாகப் பாவித்து அதிகார துஷ்பிரயோகம் செய்கிறது என பல எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.